Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 19 2025

செவ்வாய்க்கிழமை 19, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 031 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

### மின்சார சபைக்கு

## ரூ. 13.1 பில்லியன் இழப்பு

இந்த (2025) ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் 5.31 பில்லியன் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

எனினும், கடந்த 2024ஆம் ஆண்டு இதே காலாண்டில் இலங்கை மின்சார சபைக்கு 34 பில்லியன் ரூபாய் இலாபம் கிடைத்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இரண்டு முறை மின்சார கட்டணக் குறைப்புகளுக்குப் பின்னர் இந்த சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# வடக்கு கிழக்கில்

## சில இடங்களில் அரை ஹர்த்தால்




## சில இடங்களில் முழு பிசுபிசுப்பு




வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்திற்கும் காணி அபகரிப்புக்கும் எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கை தமிழரசுக் கட்சியால் திங்கட்கிழமை (18) முழு கடையடைப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கு தலைவணங்கி, வடக்கு கிழக்கில் ஒருசில இடங்களில் ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது.

எனினும், இன்னும் சில இடங்களில், அந்த அழைப்பை முழுமையாக நிராகரித்து, வழமைபோல, செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இன்னும் சில இடங்களில் அரை ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் முழு கடையடைப்பை முன்னெடுக்குமாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், ஓகஸ்ட் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும், அந்த ஹர்த்தால் 17 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டது. இந்நிலையில், அது பலரின் நன்மை கருதி காலையில் மாத்திரம் ஹர்த்தால் முன்னெடுக்கப்படுமென எம்.ஏ.சுமந்திரன் அறிவித்திருந்தார். எனினும், வடக்கு,கிழக்கில் உள்ள மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மட்டுமே முழுமையான ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. இன்னும் ஒருசில இடங்களில் வழமைபோன்று செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

முழு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருக்குமாயின், அங்கு ஒவ்வொரு துறைகளின் நிர்வாகமும் முடங்கியிருக்க வேண்டும் எனினும், சில நகரங்களில் வழமை போன்று பெரும்பாலான கடைகள் திறக்கப்பட்டு இருந்தன. பிரதான சந்தைகள் திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

தொடர்ச்சி P2

## மருத்துவ ஆலோசனையை உடனடியாகப் பெறுக

நாட்டில் சிக்குன்குனியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களில் 10 முதல் 15 சதவீதமானோருக்கு நீண்டகால மூட்டுவலி அல்லது மூட்டு வீக்கம் ஏற்படுவதாக பேராதனை வைத்தியசாலை நிபுணர் வைத்தியர் ரலபனாவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வைத்தியர் ரலபனாவ மேலும் கூறியுள்ளதாவது,

சிக்குன்குனியா காய்ச்சல் பீடித்து முதல் 3 வாரங்களில் காய்ச்சலுடன் ஏற்படும் கடுமையான மூட்டு வலி இயல்பானது. இந்த நேரத்தில் முழுமையான ஓய்வு எடுக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

## 2026இல் மாகாண சபைத் தேர்தல்?

அடுத்த ஆண்டு (2026) முதல் ஆறு மாதங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் செயல்முறை தொடர்பான தற்போதைய சட்ட சிக்கல்களைத் தீர்க்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

தொடர்ச்சி P2

## “கிரிமியா, நேட்டோவை மறந்து விடுங்கள்”

### ஜெலன்ஸ்கிக்கு ட்ரம்ப் வைத்த ‘செக்’



ரஷ்யாவிடமிருந்து கிரிமியாவை திரும்பப் பெறுவது, நேட்டோவில் உறுப்பு நாடாவது போன்ற எண்ணங்களை உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கைவிட்டுவிட்டால், போர் நிறுத்தம் உடனடியாக சாத்தியப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம், ஆங்கரேஜ் நகரில் சனிக்கிழமை(16) அன்று சந்தித்துப் பேசினர். அப்போது, ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை நிறுத்துவது தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. தொடர்ந்து, டொனால்டு ட்ரம்ப்பை, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வொஷிங்டனில் இன்று சந்தித்துப் பேசுகிறார். இந்தச் சந்திப்புக்கு முன்னதாக கிரிமியா, நேட்டோ மறந்து விட்டால் போர் நிறுத்தம் உடனடியாக சாத்தியம் என்று

தொடர்ச்சி P2

## கடத்தல்காரர்களின் சொத்துக்களை பறிமுதல்?

போதைப்பொருள் கடத்தல்காரர்களான தெமட்டகொட ருவான் மற்றும் கரந்தெனியே சுத்தா ஆகியோருக்கு சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கட்டிடங்கள்,

தொடர்ச்சி P2

## திருத்தப்பட்ட விதிமுறைகள் இன்று சமர்ப்பிப்பு

அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விதிமுறைகள் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக செவ்வாய்க்கிழமை (19) சமர்ப்பிக்கப்பட உள்ளன.

இந்தத் திருத்தங்கள் நிறுவனங்களுக்கான அந்நியச் செலாவணி வெளியீட்டு வரம்புகளை அதிகரிக்கும் என்று பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் டாக்டர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ கூறுகிறார். தற்போது, பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் 500,000 அமெரிக்க டொலர்கள் வரை வெளியிடலாம், இந்த வரம்பு

தொடர்ச்சி P2

## மன்னாரில் 16ஆவது நாளாக போராட்டம் தொடர்கின்றது

### செல்வநகர் கிராம மக்கள் பங்கேற்பு



**எஸ்.ஆர்.லெம்பேட்**

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் 16ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் திங்கட்கிழமை (18) அன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற

தொடர்ச்சி P2

### பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் வரை

## “ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும்”



பொறுப்புள்ள முற்போக்கான மக்கள் சார் எதிர்க்கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் இந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் வரை ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வடக்கு கிழக்கில்

## சில இடங்களில் அரை ஹர்த்தால்

## சில இடங்களில் முழு பிசுபிசுப்பு

இதன் போது மக்களின் நடமாட்டமும் காணப்பட்டது. அரச, தனியார் பொது போக்குவரத்து சேவையும் வழமை போன்று இடம் பெற்றது. அரச திணைக்களங்கள் மற்றும் அரச பாடசாலைகளும் இயங்கின.

இன்னும் சில நகரங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு காணப்பட்டதுடன் பொதுச் சந்தைகளும் மூடப்பட்டிருந்தன.

இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தனி ஓர் அரசியல் கட்சியின் ஹர்த்தாலுக்கான அழைப்பிற்கு ஆதரவு வழங்க முடியாது என அறிவித்துள்ளது.

அது குறித்து ஊடகங்களுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுப்பதற்கு முன்னர் இது குறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தமிழ் தேசியம் சார்ந்த அனைத்துக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் என்பவற்றுடன் கலந்துரையாடல்களை நடாத்தி இருக்க வேண்டும். அதன்பின்னரேயே ஒரு முடிவுக்கு வந்து பொதுவான திகதியில் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருக்க வேண்டும்.

இது எதுவும் இலலாமல் ஒரு கட்சியை சேர்ந்த ஒருசிலர் தன்னிச்சையாக தீர்மானம் எடுத்துவிட்டு அதற்கு ஆதரவுகோரும் பட்சத்தில் மாணவர் ஒன்றியமாகிய எம்மால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது சுயமாக இயங்கும் ஒரு அமைப்பாகும். வடக்கு கிழக்கில் இருந்து இராணுவ பிரசன்னத்தை குறைக்க வேண்டும், இராணுவத்தின் பிடியில் உள்ள தமிழ் மக்களது காணிகள் மக்களிடமே மீளளிக்கப்பட வேண்டும், இராணுவத்தின் அராஜகம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் எம்மிடம் மாற்றுக் கருத்து இல்லை.

தமிழ் மக்களது உரிமை சார் பிரச்சினைகளுக்காக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக நாங்கள் குரல் தொடர்ந்து குரல் கொடுத்து வருவது யாவர்க்கும் தெரிந்த விடயமே. ஆனால் ஒரு சில தரப்பு தமது சுயலாபங்களுக்காக மேற்குறித்த விடயங்களை கையில் எடுத்து அரசியல் செய்வதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கவும் மாட்டோம், அதற்கு துணை போகவும் மாட்டோம். மேலும் பல்கலைக்கழகத்தில் பாடநேர அட்டவணைகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டுள்ளன. பாடங்கள் உரிய நேர அட்டவணையின்படி ஒழுங்காக நடைபெறும். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் வழமை போல கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

## மருத்துவ ஆலோசனையை உடனடியாகப் பெறுக

சிக்குன்குனியா காய்ச்சலின் பின்னர் ஏற்படும் மூட்டுவலி, 40 சதவீதமானோருக்கு 3 வாரங்கள் முதல் 3 மாதங்கள் வரை நீடிக்கிறது.

அத்துடன், 20 சதவீதமானோர் 3 மாதங்களுக்கும் மேலாக மூட்டுவலியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிக்குன்குனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கால், கை, கைவிரல், மணிக்கட்டு பகுதியில் வீக்கம் மற்றும் வலி, மற்றும் தளர்வாக நடப்பது போன்ற அறிகுறிகள் ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்தால், உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என நிபுணர் ரலபனாவ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 2026இல் மாகாண சபைத் தேர்தல்?

பரந்த அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் வலியுறுத்தினார்.

அரசியலமைப்பு மாற்றங்கள் ஒரு பரந்த அரசியல் செயல்முறையின் ஒரு பகுதியாகவே இருந்தாலும், தேர்தல்கள் திட்டமிட்டபடி நடைபெறுவதை உறுதி செய்வதற்கான சட்டத் தடைகளை நிவர்த்தி செய்வதில் உடனடி கவனம் செலுத்தப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

## திருத்தப்பட்ட விதிமுறைகள் இன்று சமர்ப்பிப்பு

திருத்தங்களின் கீழ் 750,000 அமெரிக்க டொலர்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பட்டியலிடப்படாத நிறுவனங்களுக்கு, வரம்பு 150,000 அமெரிக்க டொலர்களிலிருந்து 200,000 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும்.

இந்த முடிவு வணிக விரிவாக்கத்தை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று டாக்டர் பெர்னாண்டோ கூறினார்.

இதற்கிடையில், பொதுக் கடன் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விதிமுறைகளும் செவ்வாய்க்கிழமை (19) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கூடுதலாக, பொது நிதிக் குழுவால் சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட சூதாட்ட ஒழுங்குமுறை ஆணைய சட்டமூலத்தை பரிசீலனைக்கு உட்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## ரூ. 13.1 பில்லியன் இழப்பு

அதற்கமைய,கடந்த வருடத்தின் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் வருவாய் 33 சதவீதம் குறைந்து 98 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதுடன், செலவுகள் சுமார் 92 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இருப்பினும், இந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது, இரண்டாவது காலாண்டு வருமானம் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

அதற்கமைய, வருவாய் 93 பில்லியன் ரூபாவிலிருந்து 98 பில்லியன் ரூபாயாக உயர்ந்தது.

மேலும் செலவுகள் 112 பில்லியன் ரூபாவியிலிருந்து இருந்து 92 பில்லியன் ரூபாவாகக் கடுமையாகக் குறைந்தது.

இதனிடையே, 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கு, இலங்கை மின்சார சபை 13.1 பில்லியன் ரூபாய் இழப்பைப் பதிவு செய்துள்ளது. விசேடமாக மார்ச் மாதத்தில் ஏற்பட்ட பெரும் இழப்புகள் இதில் தாக்கம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "கிரிமியா, நேட்டோவை...

**ஜெலன்ஸ்கிக்கு 'செக்' வைத்துள்ளார் ட்ரம்ப் –**

1971இல் சோவியத் யூனியன் உடைந்தபோது உருவான நாடுதான் உக்ரேன். அப்போது கிரிமியா உக்ரேனின் ஒரு பகுதியானது. கிரிமியாம் உக்ரேன்நாட்டின் ஒரு தீபகற்ப பகுதியானது. எல்லை ரீதியாக உக்ரேனுடன் இருந்தாலும், அங்கே ரஷ்யர்களே அதிகமாக இருந்தனர். அதனால் ரஷ்ய இனக் குழுக்களுக்கும், உக்ரேன் இனக் குழுக்களுக்கும் இடையே புகைச்சல் இருந்தது.

மேலும், ரஷ்ய ஆட்சியாளர்களும் கிரிமியா ரஷ்யாவுடைய பிராந்தியம் என்று தொடர்ச்சியாகக் கூறி அந்தப் புகைச்சலுக்கு வலு சேர்த்துக் கொண்டே இருந்தனர். இந்த நிலையில், ரஷ்யா கடந்த 2014ஆம் ஆண்டு இதை தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. இது உக்ரேனுக்கு பேரிழப்பானது.

கிரிமியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இருப்புக்கள் அதிகமாக உள்ளன. மேலும், இது ஒரு முக்கியமான சுற்றுலாத் தலமாகவும் திகழ்கிறது. கிரிமியாவை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததன் மூலம், ரஷ்யா கருங்கடலில் தனது இராணுவ இருப்பை பலப்படுத்தியுள்ளது. அதேவேளையில், உக்ரேனுக்கு சுற்றுலா மூலம் வந்த வருமானம் தடைப்பட்டது.

இயற்கை வளங்கள், இராணுவ முக்கியத்துவம், சுற்றுலா வருமானம் என மூன்று விஷயங்கள் உக்ரேனுக்கு பறிபோனது. அது மட்டுமல்லாது, இன, கலாசார ரீதியாகவும் கிரிமியா உக்ரேன்அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. அதனாலேயே, "கிரிமியாவை ரஷ்யா ஆக்கிரமித்துக் கொண்டது. அது எங்களின் பிராந்தியம். அதை மீட்டெடுக்க வேண்டும்," என்று உக்ரேன் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தீவுப் பகுதியான கிரிமியாவையும், ரஷ்யாவையும் நேரடியாக இணைக்க 19 கி.மீ. தூரம் கொண்ட ஒரே ஒரு பாலம் மட்டுமே உள்ளது. இதுவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினால் அமைக்கப்பட்டது. இந்தப் பாலத்தில் வீதி மற்றும் ரயில் என இரு தனித்தனி பாதைகள் உள்ளன. கடந்த 2022ஆம் ஆண்டு ரஷ்ய இராணுவம் இந்த பாலத்தின் வழியாகத்தான் உக்ரேனுக்குள் முதல் முறையாக ஊடுருவியது என்பது குறிப்பிடத்தக்கது. போர் மூண்ட சில நாட்களிலேயே உக்ரேன் இந்தப் பாலத்தை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்தியது என்பது நினைவுகூரத்தக்கது. ஆனால், அதனை உடனடியாக ரஷ்யா சரி செய்தது.

நிலைமை இவ்வாறாக இருக்க, கிரிமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே அங்கீகரிக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறி வருகிறார். ட்ரம்ப்பின் இந்த முடிவுக்கு உக்ரேன் நிச்சயமாக உடன்படாது என்றே கணிக்கப்படுகிறது. மேலும், ட்ரம்ப்பின் இந்த நிலைப்பாடு, ரஷ்ய ஆதரவுப் போக்கு என்றும் விமர்சிக்கப்படுகிறது. பல காலமாக சர்ச்சைக்குரிய பகுதியாக கிரிமியா இருக்கும் நிலையில், ட்ரம்ப்பின் இந்த நிலைப்பாடு போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்காது, மாறாக ஒரு புதிய சிக்கலுக்கே வழி வகுக்கும் என்றும் கூறப்படுகிறது.

**நேட்டோவை எதிர்க்கும் ரஷ்யா–**

நேட்டோ என்பது வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு. அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் உள்பட 12 நாடுகள் சேர்ந்து 1949இல் இந்த இராணுவ கூட்டு அமைப்பை உருவாக்கின. இதில் உறுப்பினராக உள்ள எந்தவொரு நாடு மீது ஆயுத தாக்குதல் நடந்தால், அந்த நாட்டைக் காக்க மற்ற உறுப்பு நாடுகள் ஓரணியாக சேர்ந்து இயங்க வேண்டும்.

அந்த வகையில், உக்ரேனை நேட்டோவில் உறுப்பு நாடாக இணைத்தால், ரஷ்யாவிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது உக்ரேனின் கணக்கு. 1990களில் இருந்தே உக்ரேன்நேட்டோ அமைப்புடன் இணக்கம் காட்டி வந்தாலும் கூட 2014இல் உக்ரேனில் அமைந்த ஆட்சி, முழுக்க முழுக்க மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவான ஆட்சி. அந்த ஆட்சி உக்ரேனை நேட்டோவுடன் இணைப்பதில் அதி தீவிரம் காட்டியது. இதுதான் ரஷ்யா - உக்ரேன்போருக்கான மிக முக்கிய புள்ளி என்றாலும் அது தகும்.

ஏனெனில் உக்ரேன்நேட்டோவில் இணைந்தால் அங்கே அமெரிக்காவின் கை ஓங்கும், அது நமக்கு பேராபத்து என்று கருதியது ரஷ்யா.

## மன்னாரில் 16ஆவது நாளாக போராட்டம் தொடர்கின்றது

போராட்டத்தில் செல்வநகர் கிராம மக்கள் திங்கட்கிழமை(18) அன்று இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்தனர்.

திங்கட்கிழமை (18) காலை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும்,ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெறவுள்ள விசேட சந்திப்பின்போது, மன்னார் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வை ஜனாதிபதி வழங்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## கடத்தல்காரர்களின் சொத்துக்களை பறிமுதல்?

வாகனங்கள் மற்றும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பிற சொத்துக்கள் உட்பட போதைப்பொருள் கடத்தல் மூலம் ஏராளமான பணம் வருமானமாக பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதற்கமைய, அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களை கைப்பற்றி பறிமுதல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அடுத்த 2 வாரங்களுக்குள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## "ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும்"

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் Citizens' Voice வேலைத்திட்டத்தின் கீழ், வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு சமூகமளித்து தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலான விடயங்களை முன்வைத்தனர். இந்தப் பிரச்சினைகளை உன்னிப்பாகக் கேட்டறிந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பின்னர் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்அவர்கூறியுள்ளதாவது, "வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற கொள்கை அறிக்கையின் 72ஆவது பக்கத்தில், வேலையில்லாப் பட்டதாரிகளை எவ்வாறு தொழிலுக்கு உள்ளீர்ப்போம் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

20,000 பேரை ஆசிரியர் தொழிலுக்கும், 3,000 பட்டதாரிகளை STEM துறையிலும் மேலும் 9,000 பேரை STEM அல்லாத துறைகளிலும் உள்ளீர்ப்புச் செய்வோம் என கொள்கை அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தாலும், இன்று கிட்டத்தட்ட 40,000 பட்டதாரிகள் வேலையில்லாமல் காணப்படுகின்றனர். இந்த பட்டதாரிகள் கைவிடப்பட்டுள்ளனர். இவர்களின் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் பொய்த்துப்போய்விட்டது.

தேர்தல் சமயங்களில் வழங்கிய வாக்குறுதிகளும், ஏமாற்றும் கதைகளும் இன்று சமூக ஊடகங்களில் பரவி காணப்படுகின்றன.

தாம் பதவிகளுக்கு வந்த பிற்பாடு தொழில்களை நிச்சயம் பெற்றுத் தருவோம் என ஆளும் தரப்பு அமைச்சர்கள் தேர்தல் சமயங்களில் வேலையில்லா பட்டதாரிகள் மத்தியில் பல வாக்குறுதிகளை வழங்கினர்.

தமது முதலாவது வரவு-செலவுத் திட்டத்திலயே தொழில்களைப் பெற்றுத் தருவோம் என வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். தேர்தல் காலத்தில் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவைப் பெற்றுத் தர வேலையற்ற பட்டதாரிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை முன்னெடுத்த நபருக்கு இன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பணிப்பாளர் பதவியைப் பெற்றுக் கொடுத்து விட்டு, ஏனைய பட்டதாரிகளை கைவிட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

அத்துடன்,வேலையில்லாப் பட்டதாரிகள் தமது தொழில் உரிமைக்காகப் போராடும்போது, பல்வேறு தரப்பினர் அவர்களைக் கேலி செய்து வருகின்றனர். இவர்களை பெறுமானம் அற்றவர்களாக கருதுகின்றனர். இத்தரப்பினர் இலவசக் கல்வி முறையின் மூலம் பட்டம் பெற்றவர்கள். ஆகவே அவர்களை அவ்வாறு கருத வேண்டாம். அவர்களினது தகுதிகளை குறைமதிப்புக்குட்படுத்த வேண்டாம். இலவசக் கல்வியின் மூலம் பட்டம் பெற்ற பிள்ளைகளை பெறுமானம் அற்றவர்கள் என்று குறிப்பிடுவது வெட்கக்கேடானதும், அவமரியாதைக்குரிய செயலாகும்.

மேலும், இளங்கலைப் பட்டத்தை அடிப்படைத் தகுதியாகக் கொண்ட சுமார் 50,000 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என பிரதமர் ஹரிணி அமரசூரிய அமைச்சரவைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார். 50,000 வெற்றிடங்கள் காணப்படுவதாக இருந்தால், இந்த 40,000 பட்டதாரிகளை ஏன் ஆட்சேர்ப்பு செய்யப்படாதிருக்கின்றனர் என்பதில் பிரச்சினை எழுகிறது என்றார்.

## காரைதீவில்
# ஹர்த்தாலுக்கு ஆதரவில்லை

■ வி.ரி.சகாதேவராஜா

இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் வடக்கு கிழக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தாலுக்கு அம்பாறை மாவட்டம் காரைதீவில் போதுமான ஆதரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அங்கு கடைகள், வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் திறக்கப்பட்டு வழமைபோல் இயங்கியுள்ள நிலையில் ஒருசில கடைகள் மாத்திரமே பூட்டப்பட்டிருந்தன.

அனைத்து பாடசாலைகளும் வழமைபோல் இயங்கிய நிலையில், மாணவர்களின் வரவு சற்று குறைந்து காணப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தும், அதற்கு மாறாக இவ் இயல்புநிலை காணப்பட்டது.

தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் பூரண ஆதரவினை வழங்குவதாகத் தெரிவிப்பதுடன், இக்குறித்த ஹர்த்தாலுக்கு காரைதீவு பிரதேச மக்களும் வர்த்தகர்களும் முழுமையான ஆதரவினையும் ஒத்துழைப்பையும் வழங்கும்படி அழைப்பு விடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு கரடியனாறு பொலிஸ்பிரிவில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக் காணாமல் போன நிலையில் முத்தையன்கட்டு குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் படுகொலை தொடர்பாக நீதி வேண்டியும், வடகிழக்கு பகுதியில் வாழ்கின்ற தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற இராணுவ கெடுபிடிகளைக் கண்டித்தும் ,நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தியும் 18ஆம் திகதி இடம்பெறும் பூரண ஹர்த்தாலுக்கு இலங்கை தமிழரசுக்கட்சி சார்பில் பூரண ஆதரவு வழங்குவதுடன் காரைதீவு பிரதேச மக்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினரும் கடைகள் மற்றும் தொழில்களை மூடுவதன் மூலம் அன்றைய நாளில் இடம்பெறும் வடக்கு கிழக்கு தழுவிய இந்த ஒற்றுமைப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.















## பொலிஸ் மா அதிபரின் வட்ஸ்அப்க்கு
# 3,000 முறைப்பாடுகள்

புதிய பொலிஸ் மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்ட பின்னர், பொலிஸாரின் தவறான நடத்தைகள், குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்வதற்காக 071 859 8888 என்ற வட்ஸ் அப் இலக்கத்தை அறிமுகப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (17) வரை பொதுமக்களிடமிருந்து குறித்த எண்ணுக்கு கிட்டத்தட்ட 3,000 முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.




இந்த வட்ஸ் அப் இலக்கம் கடந்த 13ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வளவு குறுகிய காலத்துக்குள் பொதுமக்களிடமிருந்து இத்தனை முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.

பொலிஸார் தொடர்பான பல தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தகவல் தொடர்பான உண்மைத்தன்மையை அறிய ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

இந்த வட்ஸ் அப் எண்ணுக்கு தகவல்கள் மற்றும் புகைப்படங்களை மட்டுமே அனுப்ப முடியும். அழைப்புக்களை எடுக்க முடியாது.

## முச்சக்கரவண்டி விபத்தில் இருவர் காயம்

காலி, கலேகான - கிந்தொட்ட வீதியில் லந்தெவ சந்திக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை (17) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கார் விபத்தில் ஒருவர் காயம்

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு, பரந்தன் வீதியில் உடையார் கட்டுப்பகுதியில் திங்கட்கிழமை (18) காலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு கார்கள் சேதமடைந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பயணித்த கார் ஒன்று உடையார் கட்டு பகுதியில் வீதியில் திருப்ப முற்பட்ட போது மற்றொரு காருடன் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் காரில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் மூங்கிலாறு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



## பேருந்தில் இருந்து விழுந்து பெண் பலி

■ சுமனசிறி குணதிலக

பிபில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 5ஆம் கட்டையிலிருந்து கொட்டகம நோக்கி யாத்ரீகர்களை ஏற்றிச் சென்ற பேருந்து, அம்பகெட்டிய சந்திக்கு தெற்கே உள்ள வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது பேருந்தின் பின்புற கதவிலிருந்து இருந்து விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிபில மல்லஹாவ பகுதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆர்.எம்.குணவதி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பின்னர் குறித்த பெண் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (17) அன்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மது அருந்திய நபர் சடலமாக மீட்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி கடல் பிரதேசத்தில் மிதந்து வந்த நிலையில் சடலமொன்று திங்கட்கிழமை (18) காலை மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.ஐ.ரத்னாயக தெரிவித்துள்ளார்.

ஆரையம்பதி இராச துரை கிராமத்தைச் சேர்ந்த 72 வயதுடைய கதிர்காமத் தம்பி சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

தனது கணவர் கடந்த சில தினங்களாக அதிகளவிலான வடிசாராயம் அருந்திய நிலையில் காணப்பட்டதுடன், திங்கட்கிழமை (18) அன்று அவர் வெளியே சென்றிருந்ததாகவும் தற்போது அவரை சடலமாகக் கண்டுள்ளதாகவும் சடலத்தை அடையாளம் காட்டிய அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

அவரது மனைவி சடலத்தை அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரசன்ன ரணவீரவுக்கு மீண்டும் விளக்கமறியலில்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர எதிர்வரும் 25ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மஹர நீதவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை(18) அன்று அவர் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிரிபத்கொட பகுதியில் இடம்பெற்ற காணி மோசடி சம்பவம் தொடர்பான மஹர நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஓட்டமாவடியில் தீ; வீட்டு உரிமையாளர் கைது

■ எச்.எம்.எம். பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி 3ஆம் வட்டாரம் எம்.கே. வீதியில் உள்ள வீடொன்றில் திங்கட்கிழமை (18) அன்று தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

ஓட்டமாவடி பிரதேச சபை ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் தீப்பற்றிய வீட்டுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், வீட்டிலிருந்த அனைத்து பொருட்களும் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்த தீ வைப்பு சம்பவம் தொடர்பாக குறித்த வீட்டின் உரிமையாளரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த தீ வைப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறித்த இடத்துக்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.எம்.பைறூஸ், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார ஆகியோர் விஜயம் செய்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'வீ ஆ பிரண்ட்ஸ்' பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்



■ ஏ.எல்.நிப்றாஸ்

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மற்றும் அஸ்-ஸிறாஜ் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் 1998ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்திலும், 2001இல் உயர்தரத்திலும் கல்விகற்ற மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் அட்டாளைச்சேனை 'லியாடிவில்லா' வளாகத்தில் கடந்த சனிக்கிழமை (16) மாலை இடம்பெற்றது.

'வீ ஆ ஃபிரண்ட்ஸ்' (நாங்கள் நண்பர்கள்) என்ற தாரக மந்திரத்தின் கீழ் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் மேற்படி பழைய மாணவர்கள் குழு, ஆறாவது முறையாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. சுமார் நூறு பழைய மாணவ நண்பர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இக் காலப் பகுதியில் கல்விகற்று உயிரிழந்த 4 சக மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுக்கான விசேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றதுடன், இந்த நண்பர்கள் குழுவின் நோக்கம், கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நற்பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான அறிக்கையும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டது.

# 3) இறந்த பின்னர் யாருமே தூற்றாமல் இருக்கவேண்டும்

பாராளுமன்றம், ஒவ்வொரு மாதமும் இரண்டாவது கிழமையும், நான்காவது கிழமையும் கூடும், அதன் இறுதி வெள்ளிக்கிழமைகளில் அனுதாப பிரேரணைகள் முன்வைக்கப்படும். மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான அனுதாப பிரேரணைகள் முன்வைக்கப்படும்.

அனுதாப பிரேரணையை பெரும்பாலும் பிரதமர் ஆரம்பித்து வைப்பார், எதிர்க்கட்சித் தலைவர் அதற்கடுத்ததாக உரையாற்றுவார். இல்லையேல் ஆளும்கட்சியின் பிரதம கொறடா ஆரம்பித்து வைக்க, எதிர்கட்சியின் பிரதம கொறடா அதற்கடுத்ததாக உரையாற்றுவார். ஏனைய உறுப்பினர்களும் மறைந்த உறுப்பினர்களின் சேவைகளைப் பாராட்டுவர்.

ஜனாதிபதி, பிரதமர் அல்லது எதிர்க்கட்சி தலைவர்கள் இன்றேல் முக்கிய அமைச்சர்களாக பணியாற்றியவர்களின் மீதான அனுதாப பிரேரணைகளின் போது, ஜனாதிபதியும் பங்கேற்றுள்ளார். அனுதாப பிரேரணைகள் இடம்பெறும் நாளன்று மறைந்த அந்த உறுப்பினரின் உறவினர்கள் சபாநாயகரின் கலரியில் பிரசன்னமாய் இருப்பர்.

மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான அனுதாப பிரேரணைகள் இன்னும் எடுத்துக்கொள்ளாமலே இருக்கின்றன. இதற்கிடையே பல பாராளுமன்ற உறுப்பினர்கள் காலமாகி விட்டனர். அவர்கள் மீதான அனுதாப பிரேரணைகளும் அவ்வப்போது எடுத்துக்கொள்ளப்படும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மறைவு அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்குப் பேரிழப்பாகவே அமையும். இன்னும் சிலரின் இழப்பு முழு நாட்டு மக்களுக்கும் பேரிழப்பாகவே அமையும்.

மக்களின் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் மனங்களை நல்ல செயல்களால் வென்றிருக்கவேண்டும். எனினும், அண்மையில் மறைந்த கண்டி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தையின் மறைவுக்குப் பின்னர் சமூக வலைத்தளங்கள் மிகக் கடுமையான முறையில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

அதிகாரம் இருக்கும்போது செய்த அட்டூழியங்கள் புட்டுபுட்டு வைத்துள்ளனர். தான் உயிருடன் இருக்கும் வரையிலும் அனுரகுமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக விடமாட்டேன் என்று லொஹான் ரத்வத்தவின் உரையையும், அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி தலைமையிலான ஆட்சியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியைக் கண்கூடாகக் காண்பதற்கு லொஹான் போன்றவர்கள் உயிருடன் இருக்கவேண்டும் என அமைச்சர் லால் காந்தவும், ஆற்றிய உரைகள் ஒப்பிட்டுப் போடப்படுகின்றன.

ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சட்டம் சகலருக்கு சமமானது என்றால் லொஹான் ரத்வத்த வெளியில் இருக்கமுடியாது எனக் கூறியிருந்தார்.

உண்மையில், உடதலவின்ன முஸ்லிம் இளைஞர்கள் 10 பேர் படுகொலைச் செய்யப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர், அனுராதபுர சிறைச்சாலைக்குச் சென்று, அங்கு தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து, முழந்தாலிடச் செய்து, நெற்றிப்பொட்டில் கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டியமை மற்றும் திகனை வன்முறை உள்ளிட்டவை தொடர்பில் லொஹான் ரத்வத்தைக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒருவர் மறைந்து விட்டால் அவரது மறைவுக்குப் பின்னர் யாரும் தூற்றாமல் இருக்கவேண்டுமாயின் இருக்கும் போது யாருக்கும் தீங்கிழைக்காது வாழவேண்டும். இது யாவருக்கும் பொதுவானதாகும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

இந்த ஜகம் (உலகம்) யுகம் பல கடந்தாலும் கூட இன்னமும் இங்கு வாழ்ந்த மாந்தர்களின் ஆணவம் செருக்கு இன்னமும் அழிந்ததாகத் தெரியவில்லை.

ஆணவம் அழியாது. ஆனால், ஒடுங்கும் என்றே சொல்லப்படுகின்றது. சாதாரண மனிதர்களில் இருந்து மாபெரும் அறிஞர்கள், மன்னர்கள், தனவந்தர்கள் என எல்லோருமே உண்மையான பிறப்பின் பெருமையை அறியாது. ஆணவ முனைப்புடன் வாழ்ந்ததால், தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டார்கள்.

இது யார் தப்பு? இயற்கையின் விதி அழுத்தத்திற்கு எதிர்வினையாக அதே அழுத்தம் உண்டு. இந்த சுழற்சி நிற்பதும் இல்லை. அன்பைக் கொடுத்தால் மாபெரும் அன்பு தேடிவரும்.

கலவரம், அராஜகம், எளிய மக்கள் மீது வீரம் காட்டுதல், மக்களிடையே பிரிவுகளை வளர்த்துப் பிரிய வைத்தல், எல்லாமே ஆணவத்தின் மறுவடிவம். கெட்டதை மட்டும் செய்வேன் என துஷ்டர்கள் செய்தால் அது அவர்கள் நெஞ்சத்தினுள் புதைத்த கறல் அல்லவா? அறம் இவர்களை அறுத்தெறியும்.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

# ஹர்த்தாலுக்கான மு.காவின் ஆதரவை 'அவர்கள்' எவ்வாறு நோக்குவார்கள்?

**மொஹமட் பாதுஷா**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அளவுக்கதிமாக இராணுவத்தினரின் பிரசன்னத்தை எதிர்த்து நேற்றைய தினம் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. வடக்கில் ஒரு இளைஞர் உயிரிழந்ததற்கு இராணுவமே காரணம் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.**

இலங்கை தமிழரசுக் கட்சி இதற்கு அழைப்பு விடுத்தது. வேறு பல கட்சிகளும் அமைப்புக்களும்; ஆதரவளித்துள்ளன. சில தென்னிலங்கை மலையக கட்சிகளும் ஆதரவை அறிவித்திருந்தன. சமகாலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இதற்கான ஆதரவைப் பகிரங்கமாக அறிவித்திருந்தது.

ஜனநாயக நாடொன்றில் மக்கள் எதிர்ப்பின் வடிவமாக இவ்வாறான கடையடைப்புக்கள் இடம்பெறுகின்றன. ஆனால், இலங்கைச் சூழலில் ஹர்த்தால் என்பது வர்த்தக நிலையங்களை மூடுவதும், போக்குவரத்தைத் தடை செய்வதும், நகர்ப்பகுதியில் உள்ள வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களை முடக்குவதுமாகவே இருந்து வருகின்றது.

தவிர, அரச மற்றும் தனியார்த் துறை ஊழியர்களோ அல்லது அதிகாரிகளோ இப்படியான ஜனநாயக முயற்சிகளுக்கு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு ஆதரவளிப்பதை விடவும், கடமைக்குச் சென்று எப்படியாவது ஒப்பமிட வேண்டும் என்ற மனப்பாங்கிலேயே இருக்கின்றனர். அதுதான் யதார்த்தமும் ஆகும்.

அந்த வகையில், நேற்றைய ஹர்த்தால் வெற்றிகரமாக, பூரண ஹர்த்தாலாக அமைந்ததா என்பது வேறு விடயம். ஆனால், நிச்சயமாக அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் ஒரு செய்தியைச் செய்தியைச் சொல்லியிருக்கும் என்பதை மறுக்க முடியாது.

ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டு பல நாட்களின் பின்னரே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோ அல்லது இராணுவப் பிரசன்னம் குறித்த வாக்குறுதிகளை வழங்கியோ இதனைத் தடுத்திருக்கலாம். ஆனால் அப்படி நடந்ததாக அறியக் கிடைக்கவில்லை.

இந்த ஹர்த்தாலுக்குப் பயந்து வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தை அரசாங்கம் குறைக்குமா என்ற கேள்வி எழுகின்றது? என்னதான் ஜே.வி.பி.யும் என்.பி.பியும். ஜனநாயகம் பேசினாலும், ஆட்சிக் கதிரைக்கு வந்த பிறகு நிலைமைகள் வேறு என்பது பட்டவர்த்தனமான விடயமாகும்.

இவ்வாறான பின்னணியில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இந்த ஹர்த்தாலுக்கான ஆதரவை தெரிவித்திருந்தது. மு.கா. ஒரு கட்சியாக, அனைத்து முக்கிய உறுப்பினர்களினதும் சம்மதத்துடன் இந்த முடிவு எடுக்கப்பட்டதா அல்லது தலைவர் றவூப் ஹக்கீமும் இன்னும் ஒரு சிலரும் எடுத்த முடிவா எனத் தெரியவில்லை.

வடக்கு, கிழக்கு என்று வருகின்றபோது, மொழியால் ஒன்றுபட்ட தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதும், பரஸ்பரம் மற்றையவரின் விடயங்களில் அக்கறை கொள்ள வேண்டும் என்பதும், இப்படியான ஆதரவு தமிழ் முஸ்லிம் உறவைப் பலப்படுத்துவதற்கான சமிக்ஞைகளாக அமையும் என்பதும் அனுமானி;க்கக் கூடிய விடயங்கள்தாம்.

மு.கா. தலைவர் சொன்னார் என்பதற்காக முஸ்லிம்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்;றோ இல்லாவிட்டால் கொஞ்சம்கூட ஆதரவளித்திருக்க மாட்டார்கள் என்றோ முஸ்லிம் காங்கிரஸின் எல்லா அழைப்புக்களுக்கும் முஸ்லிம் சமூகம் ஆதரவளிக்கும் என்றோ யாரும் கருத முடியாது. அது அஷ்ரபின் காலத்தோடு முடிந்து விட்டது.

வடக்கு, கிழக்கில் உள்ள பல தமிழ்க் கட்சிகள் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தாலும் இன்னும் ஒரு சில அரசியல் அணிகளும், அமைப்புக்களும்; இதற்கு ஆதரவளிக்கவில்லை. இது தன்னிச்சையான முடிவு என்ற காரணத்தை அவை பெரும்பாலும் கூறியிருக்கின்றன.

> **அதிகாரம் இருக்கும்போது செய்த அட்டூழியங்கள் புட்டுபுட்டு வைத்துள்ளனர். தான் உயிருடன் இருக்கும் வரையிலும் அனுரகுமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக விடமாட்டேன் என்று லொஹான் ரத்வத்தவின் உரையையும், அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி தலைமையிலான ஆட்சியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியைக் கண்கூடாகக் காண்பதற்கு லொஹான் போன்றவர்கள் உயிருடன் இருக்கவேண்டும் என அமைச்சர் லால் காந்தவும், ஆற்றிய உரைகள் ஒப்பிட்டுப் போடப்படுகின்றன.**

ஆனால், வடக்கு, கிழக்கில் அதாவது றவூப் ஹக்கீமின் சொந்த மாவட்டத்திற்கு வெளியே நடைபெறுகின்ற ஒரு ஹர்த்தாலுக்கு மு.கா. ஆதரவளித்துள்ளது. அதனை வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம்கள் செவிமடுத்தார்களா என்பது வேறு விடயம்.

மு.கா. ஆதரவளித்தது தவறில்லை. ஆனால், இதன் எதிர்விளைவுகள் பற்றி கட்சித் தலைவர் சிந்தித்தாரா? அப்படியாயின் அதிலுள்ள சாணக்கியம் என்ன என்பதுதான் விடை காணப்பட வேண்டிய கேள்வியாகும்.

அண்மைக் காலத்தில், முஸ்லிம்களுக்கு எதிரான அநியாயங்களுக்காக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பாரிய ஜனநாயக போராட்டங்களை நடத்தியிருக்கவில்லை. பள்ளிவாசல் படுகொலைக்கான நீதியை வேண்டி மு.கா. ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருக்கலாம்.

குருக்கள்மடம் புதைகுழி உள்ளடங்கலாக முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநியாயங்களுக்கு நீதியை வலியுறுத்தி இப்படியொரு ஜனநாயக போராட்டத்தை நடத்தியிருக்கலாம். ஆயினும், பாராளுமன்றத்தில் குருக்கள்மடம் பற்றி பேசியதோடு நிறுத்திக் கொண்டார் தலைவர்.

குறிப்பாக, அறுகம்பே உள்ளிட்ட இடங்களில் யூதர்களின் ஆக்கிரமிப்பைத் தடுக்கக் கோரி ஏனைய சமூகங்களையும் இணைத்துக் கொண்டு ஒரு ஜனநாயக எதிர்ப்பை தெரிவிக்க ஹக்கீம் தலைமையிலான மு.கா. கட்சி முன்னின்றிருக்கலாம். அப்படி நடக்கவில்லை.

அவ்வாறில்லாவிட்டால். இராணுவத்தினரின் பிரசன்னத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நேற்றைய ஹர்த்தாலுக்கு, முஸ்லிம்கள் தரப்பில் சில கோரிக்கைகளையும் முன்வைத்து, மேற்படி முஸ்லிம் கட்சி இதற்கு ஆதரவளித்திருக்கலாம். குறிப்பாக உரிமை மீறல்கள், காணிப் பிரச்சினை போன்றவற்றை மு.கா. வலியுறுத்தியிருக்கலாம்.

ஆனால், அவ்வாறு முஸ்லிம் சமூகம் தொடர்பான நீதிக்காகப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்காமல், வேறு தரப்பிற்குப் பின்னால் ஒழிந்து கொண்டு அல்லது வேறு விதமான அரசியலை மேற்கொள்வது நல்ல முன்மாதிரியல்ல. மு.காவின் முடிவுக்குப் பின்னால் வடக்கு, கிழக்கின் அனைத்து முஸ்லிம்களும் போகத் தயங்குவதற்கு அக்கட்சியின் இவ்விதமான போக்கே காரணம் எனலாம்.

எவ்வாறாயினும், இலங்கையில் பிரதானமான முஸ்லிம் கட்சி முஸ்லிம் காங்கிரஸ்தான். எனவே இது தமிழரசு கட்சிக்கு சாதகமானது, மறுபுறத்தில், மு.காவின் ஆதரவை தூதரகங்களும் வெளிநாடுகளும் முஸ்லிம்களின் ஆதரவாகவே கருதும் வாய்ப்புள்ளது. களத்தில் என்ன நடக்கின்றது என்ற நிலவர அறிக்கை பல தரப்பினருக்கு கிடைக்காது.

இதுவெல்லாம் அரசாங்கத்தையும் படையினரையும் சந்தோஷப்படுத்தும் விடயங்களாக இருக்கப் போவதில்லை. எனவே, இந்த ஆதரவை அரசாங்கமும் சிங்கள மக்களும் இராணுவத்தினரும் எப்படி நோக்குவார்கள் என்று மு.கா. சாணக்கியமாகச் சிந்தித்திருக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு ஆதரவளிக்கவும் அளவுக்கதிகமான இராணுவ மயமாக்கலைத் தடுக்கவும் வேண்டிய தேவையிருப்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் இதற்குப் பகரமாக அரசும், படைத்தரப்பும் முஸ்லிம்களை நோக்கி மறைமுக எதிர்வினையை ஆற்ற மாட்டாது என்பதற்கு மு.கா. தரும் உத்தரவாதம் என்னவோ!?

## கடிதங்கள்

### காட்டு யானைகளால் பெருந்தொல்லை

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(17) அதிகாலை காட்டு யானைகள் சில உட்புகுந்து பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

அதிகாலை 4 மணியளவில் பாடசாலையினுள் உட்புகுந்த இக்காட்டு யானைகள் பாடசாலையின் சுற்று மதிலின் சில பகுதிகளையும், பயன்தரும் மரங்களையும் உடைத்து சேதமாக்கியுள்ளதுடன், பாடசாலையினை அண்டிய பகுதிகளில் இருந்த சில மக்கள் குடியிருப்பு உடைமைகளுக்கும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை, பாடசாலையினை அண்டிய மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்த இக்காட்டு யானைகள் வீடுகள், சுற்றுமதில்கள், கால்நடை பராமரிப்புக் கொட்டில்கள், கால்நடை உணவுப் பொருட்கள், பயன்தரும் மரங்கள் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள் போன்றவற்றுக்கும் பலத்த சேதத்தினை ஏற்படுத்தியுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- எம்.ஏ.றமீஸ்



# போதை அடிமையாதலை தடுக்கும் முறைகள்



நடராசா கோபிராம்,
உளவியல்துறை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.



சமகால மானிட சமூகத்தில் தலைதூக்கி நிற்கின்ற முக்கிய பிரச்சினையாக, குறிப்பாக இளம் சமுதாயத்தின் வாழ்க்கையைப் பெரிதும் கேள்விக்குறி ஆக்கி வருகின்ற தீவிர பிரச்சினையாக விளங்குவது போதைவஸ்து (Drugs) ஆகும். இது உடல், உள, சமூக, ஆன்மீக சமநிலையைத் தாக்கி, ஆளுமையைச் சீரழிக்கும் நஞ்சாகக் குறிப்பிடப்படுகின்றது. பொதுவாக போதை பாவனை என்பது மனதையும், உடலையும் பாதிக்கும் இரசாயனங்களைப் பயன்படுத்தி நிற்பதைக் குறிக்கும். உளவியலின் அடிப்படையில் அதிகபட்ச போதை பாவனை 'நடத்தைப் பிறழ்வுகள்' ஏற்படுத்துவதாக ஆய்வுகள் குறிப்பிடப்படுகின்றன.

போதை அடிமை என்பது போதைப் பழக்கத்தைக் கொண்ட ஒரு நபர் தெரிந்தோ/ தெரியாமலோ தற்போது வரை போதையில் தங்கியிருக்கும் நிலையைக் குறிக்கின்றது. இவ் நிலைமை 'Drug Addiction / Drug Dependency' என அழைக்கப்படும் ஒரு நோய் நிலைமை ஆகும். இது தனிநபர் சம்பந்தப்பட்டதாக அமைந்து பின்பு பிறழ்வுகள் மற்றும் பிரச்சினைகள் சமுதாயத்தில் பல்வேறுபட்ட பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இது நரம்பியல் மண்டலத்தைப் பாதித்து உணர்ச்சிகள், சிந்தனை, நடத்தை மற்றும் உணர்வுகளை மாற்றக்கூடிய தன்மை கொண்டவை.

போதைக்கு அடிமையாகிய ஒருவர் சமுதாய வாழ்விலிருந்து விலகி அந்நியமாவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளது. போதை பாவனையால் பொதுவிதிகளை முறிக்கும் நடத்தைகள் ஏற்படுவதாக Jessor கூறுகின்றார். அத்துடன், இது ஓர் 'Deviant Behaviour (பிறழ்வு நடத்தை)" என்றும் சுட்டிக் காட்டுகின்றார். உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான போதைவஸ்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மது (அல்கஹோல்), கானாபிஸ், கெரோயின், மோர்பின், கொடின், பாபிரு ஹோறல், அம்ராமனஸ், மெஸ்கிரயின், மெற்டேன் கொகேயின்,

L. S. D, D. M. T, சிலோபின், புகையிலை, கஞ்சா, ஐஸ் முதலான பல்வேறு வகையான போதை வஸ்துக்கள் பல்வேறு தாக்கங்களை உலகளாவிய ரீதியில் உண்டுபண்ணுகின்றன.

நமது நாட்டிலும் (இலங்கையிலும்) அண்மைக்காலங்களில் அதிகரித்த பாவனை காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. 'இலங்கையில் நாளாந்தம் 40 -50 பேர் மதுப்பழக்கத்தால் மரணமடைகின்றனர்' என மது மற்றும் போதைப்பொருள் மையம் தெரிவிக்கின்றது. அத்துடன், சாராயம்,

பியர் ஆகிய மதுபான நுகர்விற்காக சுமார் 690 மில்லியன் ரூபாவை நாளொன்றிற்குச் செலவிடுவதாகவும் கூறப்படுகின்றது.

'தேசிய அபாயகர போதை திருப்பு சபை (National Dangerous Drugs Control Board/NDDCP)' 1984இல் நிறுவப்பட்டது.

இதின் அறிக்கைப்படி, 40,000 மேற்பட்டோர் போதைப்பொருள் பாவனையின் மூலம் நிரந்தர அடிமையாக்கப்பட்டுள்ளனர் என கூறுகின்றது. இந்த நிறுவனமானது.

போதைத் தடுப்பு, மீட்பு மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளைச் செய்வதுடன், விழிப்புணர்வுகள், ஆலோசனைகளையும் நிகழ்த்தி வருகின்றது.

போதை அடிமையாவதற்கு பல காரணங்கள் காரணமாகின்றன. அந்தவகையில்,

தவறான அறிக்கை மற்றும் நம்பிக்கை (போதை /வீரம், சந்தோசம், வலி நீக்கும், உஷாரை ஏற்படுத்தும் என்ற தவறான அறிக்கை மற்றும் நம்பிக்கை)

- முறையான தண்டனைகள்
- தாழ்வு மனப்பான்மை
- ஒதுங்கியிருத்தல்
- அதிகார உணர்வு
- நாகரீக மாற்றம்
- Enjoyment Purpose
- சினிமா
- தவறான நண்பர்கள் சேர்க்கை

காணப்படுகின்றன. அதிகாரத்தன்மை, போதையை அதிகமாக உள்ளெடுத்தல், சகிப்புத்தன்மை இன்மை, ஒதுங்கியிருப்பு, பொறுப்புக்களிலிருந்து விடுபடல், போதையில் அதிக நாட்டம், உடல் காயங்கள், போதை உள்தொடுப்பதில் ஆர்வம், விருப்பு போன்றவற்றை அதிகளவாகக் கொண்டிருப்பர்.

இதன் விளைவுகள் தனி நபரை மட்டுமல்லாது குடும்பம், சமூகம் என பாதிப்பை ஏற்படுத்தி உலகளாவிய ரீதியில் பல விளைவுகளையும் உண்டுபண்ணுகின்றன. அந்த வகையில்

- உடல்-மூளை பாதிப்பு
- நரம்பு மண்டல பாதிப்பு
- தற்கொலை முயற்சி
- ஈரல் பாதிப்பு
- இதய பாதிப்பு
- இரப்பை அழற்சி
- உளம் - மறதி அதிகரிப்பு
- வெறுப்பு, பயம்
- திருமண வாழ்வு பாதிப்பு
- பிரம்மை ஏற்படல்
- பாலியல் திருப்தியின்மை / ஆர்வமின்மை
- உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமை
- அதிகரித்த மனவெழுச்சிகள்
- மனச்சோர்வு
- சமூகம் -சமூகச் சீர்கேடுகள்
- துஸ்பிரயோகங்கள்
- சண்டைகள்
- விபத்துக்கள்
- குற்றச் செயல்கள் அதிகரிப்பு
- விவாகரத்துக்கள்
- பொதுச்சொத்துக்கள் நாசமாக்குதல்
- குடும்பப் பிரச்சினை

முதலான பல்வேறுபட்ட விளைவுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலைமையில் நாம் போதை அடிமையாதல்களையும் சிகிச்சை மற்றும் தடுப்பு முறைகள் பற்றி சற்று விரிவாக நாம் அவதானிப்போம்.




* பிரச்சினைகளைக் கையாளக் கற்றுக் கொடுத்தல் - பலர் தங்களுடைய பிரச்சினைகளை உரிய முறையில் கையாளத் தெரியாதனாலேயே இப்பழக்கத்திற்கு ஈடுபடுகின்றனர். ஆதலால் நம் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாளவும், தீர்க்கவும் உரிய நல்வழிமுறைகள் மற்றும் நுட்பங்களை கற்றுக்கொடுத்தல்.

* அறிகை நடத்தை சிகிச்சை (Cognitive Behaviour Therapy) - தவறான எண்ணங்கள், அறிகையை மாற்றி நடத்தையிலும், அறிகையிலும் சீரான மாற்றத்தை ஏற்படுத்துவதை இச் சிகிச்சை முதன்மையாகக் கொண்டது. இச் சிகிச்சையால் புதிய சிந்தனைகள் ஏற்பட்டு நடத்தை சீரடைவதுடன், போதை அடிமையிலிருந்து மீளவும் உதவுகிறது.

* உரையாடல் திறன் வளர்ப்பு - தனது பிரச்சினைகள் மற்றும் கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பிறருக்கு வெளிப்படுத்தவும், பிறரின் கருத்துக்களை உள்வாங்கவும் பயிற்சியளிக்கப்படுகிறது. இதன் மூலம் உதவும் பண்பும் மேம்பாடு அடைவதுடன் நம்பிக்கை, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, மகிழ்ச்சி போன்றனவும் ஏற்படுகின்றது. ஆதரவும் கிடைக்கப்பெறுவதுடன் சலிப்பு, தனிமை, மனஅழுத்தம், மனச்சோர்வு என்பன குறைவடைகிறது.

* வைத்திய ஆலோசனைய மற்றும் மருத்துவ முறைகள் - அடிமைப்படுத்தும் மருந்துகள் மற்றும் போதையின் பிரச்சினை பற்றி வைத்தியரிடம் மற்றும் உள மருத்துவரிடம் ஆலோசனை பெறமுடியும். மருத்துவ முறைகள் மூலம் போதை பாவனை தணித்தல், மனநிலை மாற்றம், போதை அடிமையிலிருந்து மீளுதல், சரியான உணவு, நித்திரைப் பழக்கத்தை ஏற்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

* தளர்வுப் பயிற்சிகள் - உடல் மற்றும் உளத்தை தளர்வுபடுத்தி ஆசுவாசப்படுத்தும் பயிற்சிகளை உரிய நேரத்துடனும் அதற்கேற்ற இடத்திலும் இருந்து அதனைச் செய்தல். சுவாசப் பயிற்சி, தியானம், யோகாசனம், மந்திர உட்சாடனம், உடற்பயிற்சிகள் என்பன மனத்தை மேம்படுத்தி நெருக்கீடுகள் ஏற்படாமல் தடுக்கின்றது.

(செவ்வாய்க்கிழமை தொடரும்...)



# படத்தை பார்க்காதீங்க

தெலுங்கு மற்றும் மலையாளத்தில் அதிக கவனம் செலுத்தி வரும் அனுபமா பரமேஸ்வரன் நடிப்பில் மலையாளத்தில் 'ஜே.எஸ்.கே.' படம் வெளியானது. இப்படம் தணிக்கை குழுவின் எதிர்ப்பை சம்பாதித்து கடந்த மாதம் 17ஆம் திகதி வெளியானது.

இந்த நிலையில், முதன்மை கதாபாத்திரத்தில் அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ள படம் 'பரதா'. இப்படம் தெலுங்கு மற்றும் மலையாளத்தில் உருவாக்கப்பட்டு வருகின்ற 22ஆம் திகதி வெளியாகிறது. இப்படத்தில் சமந்தா கேமியோ ரோலில் நடித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கோபி சுந்தர் இசையமைத்துள்ள இப்படத்தின் ட்ரெய்லர் சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதன்படி, ஒரு கிராமத்தில் பாதி முகம் மறைத்தபடி பர்தா அணியும் வழக்கத்தைக் கொண்டிருக்கும் பெண்கள், அந்த பர்தாவால் எந்தளவு சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதைப் பேசும் படமாகத் தெரிகிறது.

இந்த நிலையில், படத்தின் புரொமோஷன் பணிகளில் ஈடுபட்டுள்ள அனுபமா, படத்துக்கு எதிர்மறையான விமர்சனங்கள் வந்தால் பார்க்க வேண்டாம் என கூறியுள்ளார்.

"விமர்சகர்களுக்குப் பணம் கொடுக்கும் நோக்கம் எங்களுக்கும் இல்லை. அதற்கான வசதியும் இல்லை. இந்த படத்திற்கு வரும் விமர்சனங்கள் அனைத்தும், உண்மையாக மக்கள் மனதிலிருந்து வருபவை. அதனால் விமர்சனங்கள் நன்றாக இருந்தால் திரையரங்குக்கு வந்து படத்தைப் பாருங்கள். இல்லையென்றால், தவிர்த்துவிடுங்கள்" என்று கூறியுள்ளார்.



## இளையராஜா – வைரமுத்து
# பிரிவு எதனால்?

ஏகப்பட்ட ஹிட் பாடல்களைக் கொடுத்து வந்த இளையராஜா மற்றும் வைரமுத்து இருவரும் சில கருத்து வேறு பாடு காரணமாகப் பிரிந்ததுடன், இருவரும் இதுவரை ஒன்றிணைந்து பணியாற்றாமல் இருந்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு கூட, வைரமுத்து, "மொழியை விட சில நேரங்களில் இசை பெரிது, இசையை விட சில நேரங்களில் மொழி பெரிது... இதைப் புரிந்து கொள்பவன் ஞானி. புரிந்து கொள்ளாதவன் அஞ்ஞானி" என ஒரு மேடையில் பேசியிருந்தார். இது இளையராஜாவைத் தான் அவர் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார் எனப் பேசப்பட்டது.

வைரமுத்துவின் பேச்சுக்கு கடும் எச்சரிக்கை விடுத்த இளையராஜாவின் தம்பியும் இயக்குநருமான கங்கை அமரன், இனிமேல் வைரமுத்து இளையராஜாவைப் பற்றி சின்ன குற்றமோ குறைகளோ சொல்வதாக இருந்தால், அதற்குரிய விளைவுகளை வேறு மாதிரி சந்திக்க நேரிடும் எனப் பதிலடி கொடுத்திருந்தார்.

இந்த பதிலடிக்கு வைரமுத்து பதில் கூற மறுத்துவிட்டார். இது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினால் அது பற்றி பேசவிரும்பவில்லை எனக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் இளையராஜாவும் வைரமுத்துவும் ஏன் பிரிந்தார்கள் என்ற காரணத்தைக் கங்கை அமரன் தற்போது வெளிப்படையாக சொல்லியுள்ளார்.

ஒரு பட விழாவில் பேசிய அவர், "ஒரு முறை அண்ணனுக்கும் எனக்கும் சண்டை வந்தது. அதனால் பத்து வருஷம் அவரிடம் பேசாமல் இருந்தேன். அவரது பாடல்களுக்கு வரிகள் எழுதாமலும் இருந்தேன். அந்த நேரத்தில் தான் வைரமுத்து இடத்தை பிடித்துவிட்டார். அவர் வந்த பிறகு எனக்கு வாய்ப்புகள் குறைய ஆரம்பித்தது.

புதியவர்கள் வருவதை வரவேற்கிறோம். ஆனால் அவர், இளையராஜாவுக்கு முகவரி கிடைத்ததே அவர் வந்ததினால் தான் என பேசினார். ஆனால், அதை நான் அண்ணனிடம் சொல்லவில்லை. சொன்னால் எனக்கு வாய்ப்பு கிடைக்காத கோபத்தால் இப்படிச் சொல்கிறேன் என சொல்லிவிடுவார் என விட்டுவிட்டேன். ஆனால், பல கல்லூரி நிகழ்ச்சிகளில் தன்னுடைய வரிகளால் தான் இளையராஜா வளர்ந்து கொண்டிருக்கிறார் என வைரமுத்து பேசி வந்தார். இந்த காரணத்தால் தான் வைரமுத்துவும் இளையராஜாவும் பிரிந்தார்கள்" என்றார்.

# விரைவில் களம்காவல்

மம்மூட்டி நடிப்பில் சில மாதங்களுக்கு முன் வெளியான டொமினிக் அண்ட் தி லேடிஸ் பர்ஸ் மற்றும் பசூக்கா திரைப்படம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்த நிலையில், மம்மூட்டியின் அடுத்த திரைப்படத்தை குரூப், ஓஷானா படங்களுக்குக் கதை எழுதிய ஜித்தின் கே ஜோஷ் இயக்குகிறார். இந்த படத்தில் விநாயகன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்த படத்திற்கு 'களம்காவல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. டைட்டில் போஸ்டரை வெளியிட்டு, இதுவரை பார்த்திராத மம்மூட்டியைக் காணத் தயாராக இருங்கள் என படக்குழுவினர் தெரிவித்தது. திரைப்படம் விரைவில் வெளியாக இருக்கிறது.






# வேடன் மீது தொடரும் பாலியல் புகார்கள்

மலையாளத்தில் ராப் பாடகராகப் புகழ் பெற்ற வேடன் மீது கடந்த 2021ஆம் ஆண்டு பாலியல் புகார் எழுந்தது. ஆனால் அப்போது எந்த வழக்கும் அவர் மீது பதிவு செய்யப்படவில்லை.

கடந்த ஏப்ரல் மாதம் கொச்சியில் வீட்டில் ஆறு கிராம் கஞ்சா வைத்திருப்பதாக பொலிஸார் வேடனைக் கைது செய்து பின்னர் பிணையில் விடுவித்ததுடன், சிறுத்தை-பல் அணிந்திருந்ததாக மற்றொரு வழக்கில் வனத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். பின்பு அது ஒரு ரசிகர் தனக்குப் பரிசாக வழங்கியதாகக் கூறி பிணையில் வெளியே வந்தார்.


இதன் பின்னர் பாலக்காடு நகராட்சியின் உறுப்பினர் ஒருவர் வேடனின் இசை ஆல்பம், பிரதமர் மோடியை அவமதிப்பதாகவும், சாதிப் பிரிவினையை ஊக்குவிப்பதாகவும் புகார் கொடுத்தார். இதையடுத்து வலது சாரி ஆதரவாளர்கள் இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கினர். ஆனால் அவருக்கு ஆதரவு குரல்கள் கேரளாவைத் தாண்டி தமிழ்நாடு உட்பட பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்தது.

சமூக வலைதளங்களில் வேடன் தொடர்பான வீடியோக்கள் வைரலாகி ட்ரெண்டானது. இதன் மூலம் வேடன் இன்னமும் பிரபலமடைந்தார். பின்னர், தமிழில் விஜய் மில்டன் இயக்கத்தில் கோலி சோடா படத்தை மையப்படுத்தி புதிதாக உருவாகும் படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

இதனிடையே கடந்த மாதம் வேடன் மீது மீண்டும் பாலியல் புகார் எழுந்ததுடன், கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தைச் சேர்ந்த பெண் டாக்டர் ஒருவர், வேடன் தன்னை 2021ஆம் ஆண்டு பாலியல் வன்கொடுமை செய்ததாகவும் பின்னர் ஆகஸ்ட் 2021 முதல் மார்ச் 2023 வரை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி பலமுறை பாலியல் உறவு வைத்திருந்து பணமும் கடனாகப் பெற்றதாகவும் குற்றம் சாட்டினார்.

புகாரின் பேரில் கோழிக்கோடு, திருக்காக்கரா பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆனால், வேடன் தலைமறைவாகவுள்ளார். இதையடுத்து, அவருக்கு எதிராக லுக்-அவுட் நோட்டிஸ் பிறப்பிக்கப்பட்டது.

இதனிடையே அவர் முன் ஜாமீன் கோரி கேரள உயர்நீதி மன்றத்தில் மனு கொடுத்துள்ளார்.



மட்டக்களப்பில்...



யாழ்ப்பாணத்தில்...



வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்திற்கும் காணி அபகரிப்புக்கும் எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால், திங்கட்கிழமை(18) அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தாலில் ஆதரவளிக்கப்பட்ட பிரதேசங்களில் சில... (படங்கள் தமிழ்மிரர் நிருபர்)

மன்னாரில்...



தம்பலகாமத்தில்...



ஜம்மு-காஷ்மீர்

மேகவெடிப்பு வெள்ளப்பெருக்கில்

# 61 பேர் பலி; 116 பேர் மீட்பு



ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதியில் மேகவெடிப்பு காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 61 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய மத்திய அமைச்சர் ஜிதேந்திரா சிங் தெரிவித்துளுளார்.

அத்துடன், இரவு பகலாக நடந்த மீட்பு பணியில் இதுவரை 116 பேர் மீட்கப்பட்டு உள்ளனர் என்றும் குறிப்பிட்டுளுளார்.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட கிஷ்த்வார் மாவட்டம் சிசோடி கிராமத்தில் கடந்த 14ஆம் திகதி திடீரென மேகவெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது. இதில் நூற்றுக்கணக்கானோர் சிக்கி கொண்டுள்ளனர்.

இதுபற்றி மத்திய அமைச்சர் ஜிதேந்திரா சிங் கூறும்போது, மச்சைல் மாதா கோவில் அருகே நடந்த இந்த மேகவெடிப்பு மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவற்றால் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அச்சம் தெரிவித்த நிலையில், வெள்ளபெருக்கில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

காஷ்மீர் காவல் துறை, மாநில பேரிடர் மீட்பு படை, தீயணைப்பு படைகள், சி.ஐ.எஸ்.எப்., சி.ஆர்.பி.எப். உள்ளிட்ட படைகளும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்நிலையில், ஜம்மு மற்றும் காஷ்மீரின் தலைமை செயலாளர் அடல் துல்லூ செய்தியாளர்களிடம் இன்று கூறும்போது, கிஷ்த்வார் மேகவெடிப்பில் 61 பேர் பலியாகி உள்ளனர்.

சி.ஐ.எஸ்.எப்., ஜம்மு மற்றும் காஷ்மீர் பொலிஸ், சி.ஆர்.பி.எப்., பி.ஆர்.ஓ., இந்திய ராணுவம் மற்றும் என்.எச்.பி.சி. உள்ளிட்ட துறையை சேர்ந்தவர்கள் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்று தேடுதல் மற்றும் மீட்பு பணியில் ஈடுபட்டனர். இரவு பகலாக நடந்த மீட்பு பணியில் இதுவரை 116 பேர் மீட்கப்பட்டு உள்ளனர் என கூறியுள்ளார்.

இந்த வெள்ளத்தில், நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர். பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக முகாம்கள், பாலங்கள் நீரில் அடித்து செல்லப்பட்டன. இயல்பு வாழ்க்கை முடங்கி போயுள்ளது. தொடர்ந்து தேடுதல் மற்றும் மீட்பு பணி நடந்து வருகிறது.

சென்னை

# "தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம்"



''மதுரை பாரப்பத்தியில் கூடுவோம். தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம்'' என நடிகரும் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தலைவருமான விஜய் தெரிவித்து உள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இது குறித்து தவெக தொண்டர்களுக்கு அந்தக் கட்சியின் தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

அதில் "மக்களுடன் மக்களாக இணைந்து நிற்கும் மகத்தான மக்களரசியல் இயக்கமான த.வெ.க. மீதான தமிழ்நாட்டு மக்களின் பேரன்பும் பேராதரவும் தேர்தல் அரசியல் களத்தில் விரைவில் நிரூபிக்கப்படப் போகிறது. நமது கனவு நனவாக, இலக்கை எட்ட, புரட்டிப் போடப் போகும் புரட்சி நிகழ, இன்னும் சில மாதங்களே உள்ளன.

1967 மற்றும் 1977 தேர்தல்களின் வெற்றி விளைவுகளை, 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் இந்த மண்ணில் காணப் போகிறோம். மாபெரும் மக்கள் சக்தியான நீங்கள், இந்தத் திருப்புமுனைத் தருணத்தை நிரூபிக்கப் போவது நிச்சயம். பொறுப்பும் மிக்க ஓர் அரசியல் பேரியக்கம் என்பதை நமது ஒவ்வொரு செயலிலும் காட்ட வேண்டியது நமது தலையாய கடமை.

மக்கள் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட 'மனசாட்சி உள்ள மக்களாட்சி' என்னும் உன்னதமான அரசியல் அதிகார இலக்கை நோக்கி உறுதியுடன் பயணிக்கிறோம். மகத்தான தேர்தல் அரசியல் வரலாறு மீண்டும் நம் தமிழ்நாட்டு மண்ணில், நம்மால் நிகழப் போவது நிஜம். எனவே, அத்தகைய மாபெரும் அரசியல் விளைவை நிச்சயமாக நிகழ்த்திக் காட்டும் பேறிவிப்பாக நமது மாநில மாநாட்டை மாற்றிக் காட்டுவோம்.

உங்கள் ஒவ்வொருவருக்காகவும் உணர்வு ததும்பும் மதுரை மண்ணில், இதயம் திறந்து இரண்டு கைகளை விரித்துக் காத்திருப்பேன்.

உங்கள் விஜய், உரிமையுடன் அழைக்கிறேன். மதுரை பாரபத்தியில் கூடுவோம். தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம்" என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

லண்டன்

# ரஷ்யாவுக்கு பிரித்தானிய பிரதமர் எச்சரிக்கை

ஜெலன்ஸ்கி இல்லாமல் உக்ரைன் பிரச்சினைக்கான தீர்வை முடிவு செய்ய முடியாது என பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்-ரஷ்யா இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நடந்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து அலாஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், ரஷ்யா ஜனாதிபதி புட்டினும் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், அதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. விரைவில் ட்ரம்புடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி செல்கிறார்.

இந்நிலையில், 'விருப்ப கூட்டணி' என்ற பெயரில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரானும், ஜேர்மன் ஜனாதிபதி பிரைட்ரிச் மெர்சும் வீடியோ அழைப்பில் பேசினர்.

அதில், பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மரும் கலந்துகொண்டார். அப்போது, கெய்ர் ஸ்டார்மர் கூறியதாவது:-

"அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மேற்கொண்ட முயற்சிகள், உக்ரைன் மீதான ரஷியாவின் சட்டவிரோத போரை முடிவுக்கு கொண்டு வருவதில் முன்னெப்போதையும் விட நம்மை நெருக்கமாக ஒன்றுசேர்த்துள்ளன. உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை இணைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

அவர் இல்லாமல் உக்ரைன் பிரச்சினைக்கான அமைதி தீர்வை முடிவு செய்ய முடியாது. உக்ரைன் மீதான கொடூர தாக்குதலை புதின் நிறுத்தும் வரை, ரஷ்யா மீது மேலும் பல பொருளாதார தடைகளை நாங்கள் விதிப்போம். அவை ரஷ்ய பொருளாதாரத்துக்கும், அதன் மக்களுக்கும் ஏற்கனவே தண்டனையாக அமைந்துள்ளன" என்றார்.





இந்தியா பயணமாகும் இலங்கை அணி

# திருகோணமலை வீராங்கனைகள் இருவர்

ஜெயரட்ணம்

இந்தியாவின் புது டெல்லியில் நடைபெற்ற உள்ள 64ஆவது சுப்ரோடோ கிண்ண சர்வதேச கால்பந்தாட்ட சம்பியன்ஷிப்பில் கலந்துக் கொள்ளும் 17 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் கால்பந்தாட்ட அணி இன்று இந்தியாவுக்கு பயணமாகவுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கத்தின் வழிகாட்டலில் முகாமையாளராக டீ.எம்.எம். திஸாநாயக்க தலைமையில் பிரதான பயிற்றுவிப்பளார் சமில சம்பத் வீரசிங்க உட்பட நாடளாவிய ரீதியில் 16 வீராங்கனைகள் மேற்படி அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை அணி சார்பில் திருக்கோணமலை சென். மேரிஸ் கல்லூரி மாணவிகளான ஆர். ரிகாஸ்னி, கிருசாந்தன் யுவிஸா இவ்வணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இத்தொடரில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு அணிகள் வீதம் எட்டு பிரிவுகளில் மொத்தம் 31 அணிகள் போட்டியிட உள்ளன. பீ பிரிவில் பங்கேற்கும் இலங்கை அணி புதன்கிழமை (20) லக்ஷ்ச தீவு அணியுடனும், வியாழக்கிழமை(21) சத்திஷ்கர் அணியுடனும், வெள்ளிக்கிழமை (22) பிரபல அசாம் அணியுடனும் மோத உள்ளது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்

# அஸ்பன்யோலிடம் தோற்ற அத்லெட்டிகோ



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், அஸ்பன்யோலின் மைதானத்தில் திங்கட்கிழமை (18) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் தோற்றது.

அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலியன் அல்வரேஸ் பெற்றிருந்தார். அஸ்பன்யோல் சார்பாக மிகேல் றூபியோ, பெரே மில்லா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் அத்லெட்டிக் பில்பாவோவின் மைதானத்தில் சனிக்கிழமை (17) அன்று நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் செவிய்யா தோல்வியடைந்தது. பில்பாவோ சார்பாக நிக்கோ வில்லியம்ஸ், மரோரன் சன்னாடி, றொபேர்ட் நவரோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செவிய்யா சார்பாக டொடி லுகெபகியோ, லூசியன் அகொம்பே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, வலென்சியாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், றியல் சொஸைடட்டுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

## ஆசியக் கிண்ண பாகிஸ்தான் குழாம் அறிவிப்பு:

# தொடர்ந்தும் பாபர், றிஸ்வான், நசீம் இல்லை




ஆசியக் கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் குழாம் அறிவிக்கப்பட்ட நிலையில், அண்மைக் காலமாக பாகிஸ்தானின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாம்களில் இடம்பெற்றிருக்காத முன்னாள் அணித்தலைவர்களான பாபர் அஸாம், மொஹமட் றிஸ்வான், வேகப்பந்துவீச்சாளர் நசீம் ஷா ஆகியோர் இக்குழாமிலும் இடம்பெறவில்லை.

குழாம்: சஹிப்ஸடா பர்ஹான், சைம் அயூப், பக்கர் ஸமன், மொஹமட் ஹரிஸ் (விக்கெட் காப்பாளர்), சல்மான் அக்ஹா (அணித்தலைவர்), ஹஸன் நவாஸ், குஷ்டில் ஷா, பஹீம் அஷ்ரஃப், ஹுஸைன் தலாட், மொஹமட் நவாஸ், அப்ரார் அஹ்மட், சுஃபியான் முக்கீம், ஷகீன் ஷா அஃப்ரிடி, ஹரிஸ் றாஃப், ஹஸன் அலி, மொஹமட் வஸிம், சல்மான் மிர்ஸா.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் செல்சி-பலஸ் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(17) நடைபெற்ற கிறிஸ்டல் பலஸுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

இதேவேளை மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை றிக்கார்டோ கலஃபியோரி பெற்றிருந்தார்.

# ஆசியக் கிண்ணக் குழாமில் கில் இல்லை?

ஆசியக் கிண்ணத் தொடருக்கான இந்தியக் குழாமைத் தெரிவு செய்வதற்காக மும்பையில் இன்று செவ்வாய்க்கிழமை(19) தேர்வாளர்கள் சந்திக்கவுள்ளனர்.

இந்நிலையில் குழாமில் டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணித்தலைவர் ஷுப்மன் கில் இடம்பெறுவது கடினமாகக் காணப்படுகிறது. இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) கில் சிறப்பாகச் செயற்பட்டபோதும் தற்போதுள்ள ஆரம்ப ஜோடியான அபிஷேக் ஷர்மா, சஞ்சு சாம்சனையே தேர்வாளர்கள் விரும்புவார்களெனத் தெரிகிறது.

மூன்றாவது ஆரம்பத் துடுப்பாட்டவீரருக்கான இடமொன்று காணப்படுகின்றபோதும் அதற்கும் யஷஸ்வி ஜைஸ்வாலிடமிருந்து கில் போட்டியை எதிர்கொள்கிறார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 19, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.